**கவனிக்க.-** (i) *2020.03.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

(ii) *இவ்வார வர்த்தமானியின் பகுதி VI இல் 2020 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்ட - பலப்பிட்டி நீதாசன வலயத்துக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2168 - 2020 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2020.03.20**

*2168 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி* III *– காணிகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 98 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 100 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

97 - B 082019 - 353 (2020/03)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பாதுக்கை பிரதேச செயலாளர் ஹேரத் முதியன்சேலாகே நந்தசேன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1996.03.25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள கொ/பி/ஹங்/968 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான பின்னவல வடக்கு எனும் முகவரியில் வசிக்கும் சிங்கப்புலிகே எலிசனோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு அவிஸ்ஸா வெல்லை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் என் 5/89 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.03.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த காணியின் பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது ஆதலால், அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.04.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவின் மத்திய பற்றில்/கோறளையிலுள்ள பின்னவல வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பின்னவல எனும் கிராமத்தின் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளிக்களத் தாளில் ஏ210 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ரேகை வரைதலில் 20 ஆம் இலக்க காணித்துண்டு எனக் காட்டப்பட்டதும் 02 றூட் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்படுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு ஹொறகஹலந்த எனும் காணி,

வடக்கு : உட்பிரவேசிக்கும் வீதி ;
கிழக்கு : பி. பி. ஏ. 210 திட்ட இல. 16, 17 மற்றும் 19 காணி ;
தெற்கு : பி. பி. 17193 ஆம் இலக்கம் 07 ஐக் கொண்ட காணி ;
மேற்கு : விக்கிறமசிங்ஹகே பேபினோனாவிடம் ஒப்படைத் திருந்த ஹொறகலகந்த எனும் காணி.

எச். எம். நன்தசேன,
பிரதேச செயலாளர்,
பாதுக்க.

பிரதேச செயலகம்,
பாதுக்க,
2019, செத்தெம்பர் 12.

03-709/1

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

இலங்கை, மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் புத்தி தரங்கா கருணாசேன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1983.02.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இல. கொ /ප්‍ර 326 ஆம் இலக்க,விருது காகிதத்தின் உரிமையாளரான (முகவரி குறிப்பிடப்படவில்லை) திருமதி சிங்கன்குட்டி ஆரச்சிகே இந்திராணி அவர்களுக்கு அளித்துக் கொண்டு கொழும்பு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. ඉසදී /එන් 1/8 இற்கு கீழ் 1984.03.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும் கீழ்க் காணும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராக சட்ட ரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாததனாலோ அல்லது உரிமையுள்ளவர் இருப்பின் அவர் பின்னுரிமையாளராக்குவதற்கு விருப்பம் இல்லாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் இல்லை என்று அறிக்கையிடப்பட்டிருப்பதால் மேற்குறித்த அழிப்புப் பத்திரத்தை பொருத்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.04.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் ஹோமாகமை பிரதேச செயலகத்தில் உடுகஹ சல்பிட்டிபத்துவின் / கோரளயின் கிரிவத்துடுவை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் தியகம என்ற ஊரில் அமைந்திருக்கும் ஹோமாகம பிரதேச செயலாளரின் பொறுப்பிலுள்ள நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட கண்காணிப்படத்தில் கொ: 5906 ஆம் இலக்கம் கொண்ட துண்டாக்குதல் வரைபடத்தின் 02 ஆம் இலக்க கொண்ட காணித்துண்டாக காட்டப்பட்டிருக்கும் அளவில் 0.0661 ஹெக்டெயார் விஸ்தீரணமுடையதாகவும் கீழ்க்காணும்படி எல்லைகள் கொண்ட அரசாங்கக் காணி.

வடக்கு : -
கிழக்கு : மு. வ. கொ. 5906 துண்டு இலக்க 03 ;
தெற்கு : மு. வ. கொ. 5906 துண்டு இலக்க 04 (வீதி) ;
மேற்கு : மு. வ. கோ. 5816 துண்டு இலக்க 01 (கம்சபா வீதி) ;

புத்தி தரங்கா கருணாசேன,
பிரதேச செயலாளர்,
ஹோமாகமை.

பிரதேச செயலகம்,
ஹோமாகமை,
2019, ஒற்றோபர் 09.

03-709/2

இணைப்பு 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

இலங்கை, மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் புத்தி தரங்கா கருணாசேன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உபபிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1983.02.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இல. කො /පු 328 ஆம் இலக்க விருதுகாகிதத்தின் உரிமையாளரான (முகவரி குறிப்பிடப்படவில்லை) ஆரியப்பெரும ரத்னாயக்தோன் செனெவிரத்ன அவர்களுக்கு அளித்துக் கொண்டு கொழும்பு மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இல. ඉසදී /එන් 1/8 இற்கு கீழ் 1984.03.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருக்கும் கீழ்க் காணும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராக சட்ட ரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாததனாலோ அல்லது உரிமையுள்ளவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக்குவதற்கு விருப்பமில்லாத காரணத்தினால் பின்னுரித்திக்கு ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் மேற்குறித்த அளிப்புப்பத்திரத்தை பொருத்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.04.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் ஹோமாகமை பிரதேச செயலகத்தில் உடுகஹ சல்பிட்டிபத்துவின் / கோரளயின் கிரிவத்துடுவை மேற்கு கிராம உத்தியோகரத்தர் பிரிவின் தியகம என்ற ஊரில் அமைந்திருக்கும் ஹோமாகம பிரதேச செயலாளரின் பொறுப்பிலுள்ள நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட கண்காணிப்படத்தில் கொ: 5907 ஆம் இலக்கம் கொண்ட துண்டாக்குதல் வரைபடத்தின் 71 ஆம் இலக்கம் கொண்ட காணித்துண்டாக காட்டப்பட்டிருக்கும் அளவில் 0.0763 ஹெக்டெயார் விஸ்தீரணமுடையதாகவும் கீழ்க்காணும்படி எல்லைகள் இருக்கும் அரசாங்க காணி.

வடக்கு : மு. வ. கொ. 5907 துண்டு இலக்க 69 மற்றும் 70;
கிழக்கு : மு. வ. கொ. 5907 துண்டு இலக்க 68 (வீதி) ;
தெற்கு : மு. வ. கொ. 5907 துண்டு இலக்க 68 (வீதி) ;
மேற்கு : மு. வ. கோ. 5907 துண்டு இலக்க 68 (வீதி) ;

புத்தி தரங்கா கருணாசேன,
பிரதேச செயலாளர்,
ஹோமாகமை.

பிரதேச செயலகம்,
ஹோமாகமை,
2019, ஒற்றோபர் 10.

03- 709/3

இணைப்பு 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

ஊவா மாகாண சபையின் மொணறாகலை மாவட்டத்தில், அமைந்துள்ள செவனகலை உதவி பிரதேச செயலாளர் பிரதி பிரதேச செயலாளர் பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) ஆர். பீ. என். ஆர். பிரியஷான்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1995.09.06 ஆந் திகதிய வழங்கப்பட்டுள்ள mo/pra 9459 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான 512 முதுமினிகம செவனகல எனும் முகவரியில் வசிக்கும் லிகினி கடுவ ஆரச்சிலாகே கலோநோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு மொணறாகலை மாவட்டப் பதிவாளர்/ அலுவலகத்தில் LDO/ M9/ 70 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.11.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையுள்ளவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக்குவதற்கு விருப்பம் இல்லாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்தால் மேற்குறித்த அளிப்புப்பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகிறேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.04.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

மொணறாகலை நிர்வாக மாவட்டத்தின் செவனகலை பிரதேச செயலாளர் பிரிவின் சித்தரம் பளாதை பற்றில்/கோறளையிலுள்ள முதுமினிகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தலுக்கடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ........................... என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/என்பவரால் தயாரிக்கப்பட்டு ........................... ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ........................... என்பவரால் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் 512 ஆம் இலக்கக் காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 60 பேர்ச் விஸ்திரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : சாலே ரிசரல் ;
கிழக்கு : காணித்துண்டு இல. 513 ;
தெற்கு : காணித்துண்டு இல. 526 ;
மேற்கு : காணித்துண்டு இல. 511 ;

ஆர். பீ. என். ஆர். பிரியஷான்த,
பிரதேச செயலாளர்,
செவனகல.

பிரதேச செயலகம்,
செவனகல,
2019, நவெம்பர் 13.

03- 709/4

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/60834.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பலாத்/இகொ/06/1/பான/02.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம் பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 684 A மாலமுல்லை மேற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாலமுல்லை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குடியேற்ற அலுவலரினால் வரையப்பட்ட கே/பிஎன்டீ/14/692 காணித்துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ளதும் 10 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சமூக தேவை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு மேற்கு மாலமுல்லை அவமங்கலதார நலன்புரிச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் இன் பி. பி. கே. ஏ 3750 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் பி. பி. கேஏ. 3750;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் பி. பி. கேஏ. 3750;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் பி. பி. கேஏ. 3750 (வீதி).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2020.02.12 ஆம் திகதியிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அனுமதி வழங்கிய திகதி வரை ) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த ஆண்டின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சமூக தேவை தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற் காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, மாச்சு 20.

03-771

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.